தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, ஆனி 19, திருவள்ளுவர் ஆண்டு 2050

2019 ஜூலை 4, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்."

ஒரு செயலைச் செய்ய வேண்டுமென்று எண்ணி, எண்ணியபடி செயல் ஆற்றுவதில் உறுதியுடன் இருப்பாரானால் அவர் எண்ணியபடியே செயலில் வெற்றி அடைவார்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

31—

புதிய வாடகைக் குடியிருப்புகள்

***36629—திரு. பெரியண்ணன் அரசு:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை பூங்கா நகரில் பழுதடைந்த நிலையில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய வாடகைக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்நாளும் காவல் தெய்வமாக இருந்து எங்களைக் காத்து வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை பூங்கா நகரில் பழுதடைந்துள்ள 114 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளை இடிக்கும் பணி முழுமையாக முடிவடைந்துவிட்டது. அது வாரிய நிலம் என்பதால், தற்போது அரசு ஊழியர்களுக்குத் தேவையான குடியிருப்புகள் அங்கு கையிருப்பில் இருப்பதால் புதிய அரசு ஊழியர்களுக்கான வாடகைக் குடியிருப்புகளைக் கட்டுவதற்கான அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு அவர்கள்.

திரு. பெரியண்ணன் அரசு: மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான புதுக்கோட்டை நகரில், 114 வாடகைக் குடியிருப்புகள், வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட இருக்கின்றன. அந்த வீடுகளில் குடியேறுவதற்காக மக்கள் காத்திருக்கிறார்கள். அந்த உண்மை முதலமைச்சருக்குத் தெரியுமா அல்லது தெரியாதா என்பது தெரியவில்லை. ஏனென்று சொன்னால், வாடகை கொடுக்க முடியாமல், இப்பொழுதும் வீட்டு வசதி சங்கத்தினர் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல, புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை நகர், சத்தியமூர்த்தி நகர் மற்றும் ஆலங்குளம் ஆகிய மூன்றே மூன்று இடங்களில்தான் வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் உள்ளன. சத்தியமூர்த்தி நகர், பேருந்து நிலையத்தின் அருகில் உள்ளது.

2019 ஜூலை 4]

அங்குள்ள 90 சதவிகித வீடுகளில் யாரும் குடியேறமுடியாமல், அந்த வீடுகள் பூட்டப்பட்டுள்ளன. என்னுடைய MLA Office *அங்கு உள்ளது. அந்த வீடுகள்* MLA Office-*க்கு எதிரில்தான் இருக்கின்றன.*

அதேபோன்று Collectorate *எதிரில் உள்ள ஆலங்குளம் வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளிலும் 50% வீடுகள் பூட்டப்பட்டிருக்கின்றன. மூன்று இடங்களில் மட்டும்தான் இவை இருக்கின்றன. இதைப் பார்க்கும்போது வீடுகள் குடியேறத் தகுதியுள்ளவையாக இல்லையென்று சொல்லக்கூடிய அளவிற்கு ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது என்ற செய்தியை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது புதுக்கோட்டை நகரில் அரசு ஊழியர்களுக்கென சத்தியமூர்த்தி சாலையில் குடியிருப்பதற்கு தகுதியான நிலையில் 136 அரசு அலுவலர்களுக்கான வாடகைக் குடியிருப்புகளும், ஆலங்குளத்தில் 294 வாடகைக் குடியிருப்புகளும் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், சத்தியமூர்த்தி சாலையில் 31 குடியிருப்புகளும், ஆலங்குளத்தில் 93 குடியிருப்புகளும் அரசு ஊழியர்களுக்காகவே கட்டப்பட்டு, வீடுகள் காலியாக இருக்கின்றன. அரசு ஊழியர்கள் யாரும் அந்த வீடுகளைக் கேட்காத நிலையில், பாதுகாப்பு கருதிதான் அந்த வீடுகள் பூட்டப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகள் நல்ல நிலையில் இருக்கின்றன. வேறு காரணங்கள் இல்லை. ஏற்கெனவே, பல குடியிருப்புகள் காலியாக உள்ள நிலையில், பூங்கா நகரில் அரசு ஊழியர்களுக்கென புதிய வாடகைக் குடியிருப்புகளை உடனடியாகக் கட்ட வேண்டிய தேவை எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு அவர்கள்.*

திரு. பெரியண்ணன் அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன தகவல் தவறான தகவல். ஏனென்று சொன்னால், சத்தியமூர்த்தி நகரில்*

உள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் ஒரு பெண் குழந்தை இறந்திருக்கிறது.

**

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. நீங்கள் குற்றச்சாட்டு சொல்கிறீர்கள். நீங்கள் சொன்ன அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. (குறுக்கீடுகள்) இல்லை, கேள்வி நேரத்தில் இதுபோல் சொல்லக் கூடாது. நீங்கள் விவரத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஏதோ நினைவில் கேள்வியைக் கேட்டார். நான் சொன்ன பதிலை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனநிலையில் இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இல்லை. ஏதேதோ அவரே சில fittings-ஐ இடையில் சேர்த்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) தயவுசெய்து இருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடுகள்) பதிலை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை என்றுதான் சொன்னார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: தயவுசெய்து இருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கின்ற பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் சரியாகக் கவனித்துக்கொள்ள வேண்டும். மொத்தத்தில் புதுக்கோட்டையில் அரசு ஊழியர்களுக்கென நீங்கள் சொல்கின்ற சத்தியமூர்த்தி சாலையில் 136 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு நல்ல நிலையில் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) இருங்கள். பதிலைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசும்போது கேளுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2019 ஜூலை 4]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *ஏற்கெனவே 136 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு அதில் 31 வீடுகள்தான் காலியாக இருக்கின்றன. பாக்கி எவ்வளவு? எவ்வளவு? சத்தியமூர்த்தி சாலையில் உள்ள குடியிருப்பில் 105 வீடுகளில் குடியிருந்துகொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் கேள்வி கேட்டு முடித்துவிட்டீர்கள். எனது பதிலை முழுமையாகக் கேட்டுவிட்டு பிறகு நீங்கள் பேச வேண்டும். சத்தியமூர்த்தி சாலையில் மொத்தம் 136 வீடுகள்தான் கட்டப்பட்டன. அதில் 31 வீடுகள்தான் காலியாக இருக்கின்றன. மீதமுள்ள வீடுகளில் அரசு ஊழியர்கள் குடியிருந்துகொண்டிருக்கிறார்கள். இறப்பும், பிறப்பும் இயற்கை. ஏதோ ஒரு பெண் இறந்துவிட்டார் என்பதற்காக அங்கு வந்து குடியிருக்க மாட்டேன் என்கிறார்கள் என்ற ஒரு தோற்றத்தை செயற்கையாக உருவாக்கிக்கொண்டிருக்கிறார். அதைப்போல 294 வீடுகள் ஆலங்குளத்தில் கட்டி முடிக்கப்பட்டன. கட்டி முடிக்கப்பட்ட வீடுகளில் 93 வீடுகள் காலியாக இருக்கின்றன. 201 வீடுகளில் குடியிருந்துகொண்டிருக்கிறார்கள். ஆக, நல்ல நிலையில் இல்லாமல் எப்படி அரசு ஊழியர்கள் குடியிருந்திருப்பார்கள்? அவர் ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காக ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டார். அதை நியாயப்படுத்துவதற்காக இதைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வியைக் கேட்டால், அதற்குரிய பதில் எங்களிடமிருந்து வந்தால் அமைதியாக உட்கார்ந்துவிட வேண்டும். தேவையில்லாத வகையில் இந்தச் சபையில் பேசக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. அந்த பதிலை நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *சரியான மனநிலையில் இல்லை என்று நான் சொல்லவில்லை. நான் சொல்கின்ற பதிலை அவர் கேட்கும் மனநிலையில் இல்லை என்றுதான் சொன்னேன். ஏனென்றால் அவர் கேள்வியை நியாயப்படுத்துவதிலேயே குறியாக இருக்கின்றாரேயொழிய, என்னுடைய பதிலைக் கேட்கின்ற மனநிலையில் இல்லை என்றுதான் நான் சொன்னேனேயொழிய, அவர் சரியான மனநிலையில் இல்லையென்று நான் சொல்லவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது சரியாகத்தான் சொன்னார். அவர் பதிலைத்தான் சொன்னார். அந்த அளவில்தான் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். மற்றபடி அதில் வேறு ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டி அம்பலம் அவர்கள்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி, நத்தத்தில் சுமார் 15, 20 வருடங்களாக, காவலர்களின் நீண்டநாள் கோரிக்கையான காவலர் குடியிருப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர் குடியிருப்புகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டில் வருகிறது. இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாததால் இதனை அனுமதிக்கலாமா, அனுமதிக்க வேண்டாமா என்பதை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களின் முடிவிற்கே விட்டுவிடுகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாதது, வேண்டியதில்லை. விட்டுவிடுங்கள்.

வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

32—

தார்ச் சாலையாக மாற்றியமைத்தல்

***37611—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, புங்கார் ஊராட்சி, சுஜ்ஜில்குட்டை முதல் நீலகிரி மாவட்டம், தெங்குமரஹடா வரையுள்ள மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?